9th November 1966]

களிலும் இந்த சென்டர்களை அமைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. சா. கணேசன் : சித்த முறை அல்லது சுதேசி முறை என்ற வைத்தியத்தையும் இணைத்து அல்லது தனியாக இந்தத் துறையிலே பணி செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சித்த வைத்திய முறைகள், சுதேசி முறைகளில் வைத்தியம் செய்யக்கூடியவர்கள் இந்தியன் மெடிகல் ரிஜிஸ்ட்ரேஷன் என்ற அடிப்படையின்கீழ் வருவார்கள். தனிப்பட்ட முறையில்தான் அவர்கள் வைத்தியம் செய்ய வேண்டும். இதோடு இணைக்க முடியாது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சிகிச்சை செய்யப்பட்டு குணமடைகிறவர்களில், குறிப்பாக ஏழை மக்களாக இருப்பவர்கள் பூட்ஸ் போன்றவற்றை வாங்க முடியாத நிலையில் அவர்கள் குணம் பெற்றும் பலனை இழக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஏழைகள் சர்க்கார் நிறுவனங்களிலேயிருந்து வெளியே போகிறபோது நிரந்தரமாக அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய முறையில் இலவசமாக பூட்ஸ் முதலியவற்றை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏழைகள், பணம் கொடுத்து வாங்க இயலாத நிலையில் இருப்பவர்கள் அரசாங்கத்திற்கு மனுப் போட்டால் இவை எல்லாம் இலவசமாகவே கொடுக்கப்படுகிறது. அப்படி யாருக்காவது கிடைக்கவில்லையென்றால் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஆந்திர மகிள சபையிலிருந்து இந்த ஆண்டு சிகிச்சைக்குரிய பூரணச் செலவையும் ஏற்க வேண்டுமென்று கேட்டு அரசாங்கத்திற்கு மனு ஒன்றும் வரவில்லை என்று சொன்னார்கள். 1964-65-ல் பாதி அளவு மானியம் கொடுக்கப்பட்ட தகவல் இருக்கிறது. அதைக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு வருஷா வருஷம் பாதித் தொகையைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர்களிடமிருந்து என்ன கோரிக்கை வருகிறதோ அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் டெபிசிட் மெயின்டனன்ஸ் சார்ஜஸ் கொடுக்கப்படுகிறது.

Medical Colleges

* 568 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the State Government have received any communication from the Central Government for increasing the

number of seats in the medical colleges of the State and offering assistance in this regard ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) In June 1966, this Government increased the number of admissions to State Medical Colleges by 89. Subsequently, in August 1966, a copy of Government of India's communication requesting State Governments other than Madras to increase the admissions was received. None of the Medical Colleges in this State was included in the annexure to this letter which indicated the Medical Colleges in the country which would be in a position to increase the number of seats from October 1966.

The Central assistance offered was Rs. 15,000 per additional admission towards non-recurring expenditure and Rs. 2,000 per additional admission towards recurring expenditure for the year 1966–67. The assistance is being claimed for the extra 89 seats.

திரு. சா. கணேசன் : மத்திய ஆட்சியிலிருந்து அரசாங்கத்திற்கு வந்துள்ள கடிதம் நமக்கு அவ்வளவு சாதகமானதாக இல்லை என்பது அமைச்சர் அவர்கள் படித்ததில் இருந்து தெரிகிறது. பிற மாநிலங்களுக்குள்ள அளவு வாய்ப்போ அல்லது சலுகையோ நமக்கில்லாத நிலையில் அது காணப்படுகிறது. ஆகவே, அதை வளர்த்து, அதாவது நம் மாநிலத்திற்கு ஏராளமான, ஏராளமான என்று கூறும்போது எண்ணிக்கையற்ற என்ற பொருள் அல்ல. இப்போதுள்ளதை விட அதிகப்படியான மாணாக்கர்களைச் சேர்த்து பயிற்சி கொடுப்பதற்கோ அல்லது புதிய கல்லூரிகள் அமைத்து அதன் மூலம் செயல்படுவதற்கோ அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை அணுகிற்று? அப்படி அணுகியிருந்தால் என்ன பலன் கிட்டிற்று?

கனம் *திருமதி ஜோதி வெங்கடாசலம் : என் விடையிலிருந்து அதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். மற்ற மாநிலங்களுக்கு கொடுத்திருக்கிற காரணத்திணல் இங்கு 89 சீட்ஸ் அதிகப்படியாக இந்த ஆண்டு நாம் ஏற்கனவே ஜூன் மாதத்தில் சேர்த்திருக்கிறோம். ஏற்கனவே 986 ஆக இருந்ததை 1,075 ஆக உயர்த்தி இந்த 89 எக்ஸ்ட்ரா அட்மிஷனுக்கு அவர்கள் கொடுக்கும் 15,000 ரூபாய் நான்-ரெக்கரிங் கிரண்டும், ரூ. 2,000 ரெக்கரிங் கிரண்டும் இந்த 89 மாணவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று எழுதிக் கேட்டு அதில் ஓரளவு அந்தப் பணத்தை உபயோகப்படுத்தி வருகிறோம்.*

Army Medical Corps

* 569 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the family allowance of Rs. 250 per mensem offered by the Government to the doctors who had joined the Army Medical Corps has not been distributed to the dependents yet ; and